**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2025ம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ம் நாள் புதன்கிழமை**

**IA.272/2025**

**in**

**OS.621/2022**

**(CNR.NO.TNVP02-001516-2022)**

சௌந்தரராஜன் .... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

திலகவதி ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 23.06.2025, 11.07.2025 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு 15.07.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 19.11.2025 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.திருமணி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.கே.தேசிங்குராஜா அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு பிரிவு 151 சி.பி.சி.-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து (Reopen) உத்தரவிடுமாறு பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**<u>2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-</u>**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் தான் அவர் மேற்படி அசல் வழக்கனை எதிர்மனுதாரர் அவருக்கு எதிராக ஏற்றதை ஆற்றுகை பரிகாரம் கோரி தாக்லக் செய்துள்ளதாகவும் மேற்படி அசல் தாவாவினை மனுதாரர் அவரது தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்து நடத்தி வருவதாகவும் இந்நிலையில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் அவர் பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆக விசாரணை செய்யப்பட்ட நிலையில் அவரது தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக எக்காலத்திலும் அவரது சொத்தினை விற்பனை செய்யும் நோக்கில் பணம் பெறற்தில்லை என்றும் அவர் கடனாக மட்டும் பணம் பெற்று மேற்படி பணத்திற்கு மாதா மாதம் அசல் வட்டி என எதிர்மனுதாரர்/வாதியின் கணவரின் ரெட்டியார்பாளையம் பாரத ஸ்டேட் வங்கி, வங்கி கிளையில் பல முறை தமிழ்நாடு, அசாம், மேற்கு வங்கம் என பல மாநிலங்களில் இருந்தும், தனது மனைவி மற்றும் மகன் வங்கி கணக்குகள் மூலமும் பணம் செலுத்தியுள்ளதாகவும் இந்நிலையில் தான் செலுத்தியுள்ள பணத்தை சமூகம் நீதிமன்றத்தில் எடுத்துரைக்கவும், நிரூபணம் செய்ய வேண்டிய நிலையில் மேற்படி எதிர்மனுதாரர் /வாதியின் கணவர் திரு.முனுசாமி அவர்களின் செட்டியார்பாளையம் கிளை, பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) சேமிப்பு கணக்கு எண்.31187153566 கான கடந்த 01.01.2020 முதல் 31.12.2022 வரையிலான வரவு செலவு பட்டியல் (Statement of account) விபரங்களுடன் மேற்படி வங்கி மேலாளர் சாட்சியம் அளிக்க கோரி சாட்சிய சம்மன் அனுப்பிட அனுமதித்துகோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியாக மேற்படி வங்கி மேலாளர் நீதிமன்றத்தில் கடந்த 25.04.2025ல் ஆஜரான நிலையில் மேற்படி தேதியில் தனக்கு ஏற்பட்ட உடல்நல குறைவு காரணமாக தன்னால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகிட இயலாத

நிலையில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணியில் இருந்து விலகியிருந்தால் தனது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகிட இயலாத நிலையில் மேற்படி சாட்சி விடுவிக்கப்பட்டு மனு முடிக்கப்பட்டதுடன் தனது தரப்பு சாட்சியமும் முடிக்கப்பட்டது என்றும் இந்நிலையில் மேற்படி வங்கி மேலாளரை விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்பதால் முன்னதாக முடிக்கப்பட்ட தனது தரப்பு சாட்சியத்தை திறந்து ரெட்டியார்பாளையம் கிளை, பாரத ஸ்டேட் வங்கி மேலாளரை விாசரணை செய்ய வேண்டிய நிலையில் தனது தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்திட (Reopen) வேண்டியது அவசியமும் நியாயமுமாய் உள்ளது என்றும் இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் சம்பவிக்கும் என்றும் ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து வாதி முன்னதாக முடிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து (Reopen) உத்திரவிட வேண்டுமாய் மனுதாரர் ஆகிய தான் தாழ்மையுடன் பிரார்த்திப்பதாகவும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு:-</u>**

மேற்படி மனுதாரர் பிரிவு 151 சி.பி.சி. படி தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முன்னதாக முடிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து உத்திரவிட கோரி தாக்கல் செய்துள்ள மனு சரியல்ல என்றும் மேற்படி மனு வேண்டுமென்றே அசல் வழக்கை முடிக்க விடாமல் காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு என்பதால் மேற்படி மனுவை எடுத்த எடுப்பிலேயே எதிர்மனுதாரர்/வாதியின் செலவுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும் மனுதாரர் பிரமாணப்பத்திரிக்கையில் கூறியுள்ளது காரணங்கள் அனைத்தும் உண்மையல்ல என்றும் முற்றிலும் பொய்யானவை என்றும் மேற்படி அசல் வழக்கு கடந்த

15.11.2023ஆம் தேதியில் சிறப்பு பட்டியலில் விசாரணைக்கு வைக்கப்பட்டது என்றும் மேற்படி தேதியில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, சான்றாவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா. ஆ.9 வரையில் குறியீடு செய்யப்பட்டது என்றும் பின்னிட்டு வாதியை (வா.சா.1)ஐ பிரதிவாதி தரப்பில் கடந்த 01.12.2023ம் தேதியில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, பின்னிட்டு வாதி தரப்பில் சாட்சியாக வா.சா.2 ஆக ஆவண எழுத்தரை 21.03.2024ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டு, 23.04.2024 அன்று வாதி தரப்பில ் விசாரணை முடிக்கப்பட்டுவிட்டது என்றும் பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் விசாரணை வாக்குமூலம் 05.06.2024ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு வாதி தரப்பில் பிரதிவாதியை கடந்த 07.06.2024ம் தேதியில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும் பிரதிவாதி தரப்பில் மேலும் சாட்சியத்திற்காக வாய்தா 13.06.2024, வைக்கப்பட்டது என்றும் மேற்படி தேதியில் பிரதிவாதி தரப்பில் கட்டளை 16 விதி 1 சி.பி.சி.ஐ ஏ.நெ.1/2024 மனு தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி கடந்த 07.12.2024 அன்று அனுமதிக்கப்பட்டதாகவும் வாதியின் கணவர் முனுசாமி அவர்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் விபரங்களை கோரி சாட்சியாக வங்கி மேலாளரை விசாரணை செய்ய சாட்சி சம்மன் சார்வு செய்யப்பட்டு, சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 25.04.2025ஆம் தேதியில் திரு.பாலாஜி என்ற சாட்சி வங்கியில் இருந்து சாட்சியமளிக்க ஆஜராகி இருந்தார் என்றும் ஆனால் மேற்படி தேதியில் மேற்படி சாட்சியை பிரதிவாதி தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை என்றும் மேலும் சாட்சியை மீண்டும் வரவழைக்க (Bind over) செய்து அனுப்பி வைத்திருக்கவேண்டும் என்றும் பிரதிவாதி அவ்வாறு சாட்சியை நீதிமன்றத்திற்கு வரவழைத்துவிட்டு கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார் என்றும் அதனால் சமூகம் நீதிமன்றம் கடந்த 25.04.2025 அன்று சாட்சியை

விடுவித்து வாதுரை செய்ய உத்திரவிட்டுள்ளது என்றும் வாதி தரப்பில் கடந்த 11.06.2025ம் தேதியில் வாதுரை செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் வாதுரை செய்ய 16.06.2025, 23.06.2025, 11.07.2025 தேதிகளில் வைக்கப்பட்டதாகவும் பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் 04.07.2025 அன்று மறுதிறப்பு மனு ஐ.ஏ.நெ.272.2025 மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வேண்டுமென்றே வழக்கை முடிக்க விடாமல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் எதிர்மனுதாரர்/வாதி சமூகம் கோர்ட்டார் அவர்களை தாழ்மையுடன் பிரார்த்திக்கிறார் என்றும் மேற்படி வழக்கை முடிக்க விடாமல் காலம் கடத்த வேண்டும் என்ற தீய எண்ணத்தில் தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர அம்சங்களை இந்த எதிர்மனுதாரர்/வாதி மறுதளிக்கிறார் என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி மனுவில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மறு திறப்பு மனுவை இந்த எதிர்மனுதாரர்/வாதி செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சினை :-

மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் வழங்கி மனு அனுமதிக்கத்தக்கதா ? அல்லது இல்லையா ? என்பதே இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்?

6. <u>தீர்வு :-</u>

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிர்மனுதாரர்/வாதி ஏற்றதை ஆற்றும் பரிகாரம் கோரி மனுதாரர்/பிரதிவாதி மீது அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் 25.04.2025 தேதியில் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் அன்றைய தினம் பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் அவர்களை விசாரணை செய்ய சாட்சி சம்மன் அனுப்பப்பட்டு அவர் ஆஜரான நிலையில் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகிட இயலாத நிலையில் வழக்கறிஞர்கள் நீதிமன்ற பணியில் இருந்து விலகியிருந்ததால் பிரதிவாதி வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகிட இயலாத நிலையில் மேற்படி சாட்சி விடுவிக்கப்பட்டது என்றும் மேற்படி பிரதிவாதியின் ஆஜரின்மை வேண்டுமென்றோ, விருப்பப்பட்டோ ஏற்பட்டதல்ல என்றும் ஆகவே, மனுதாரரின் ஆஜரின்மையை மன்னித்து முடிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை திறவு செய்து பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்க இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் இல்லையேல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், மனுதாரர்/வாதியின் கணவர் முனுசாமி அவர்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் விபரங்களை கோரி சாட்சியாக வங்கி மேலாளரை விசாரணை செய்ய சாட்சி சம்மன் சார்வு செய்யப்பட்டு, சமூகம் நீதிமன்றத்தில் கடந்த 25.04.2025ஆம் தேதியில் திரு.பாலாஜி என்ற சாட்சி வங்கியில் இருந்து சாட்சியமளிக்க ஆஜராகி இருந்தார் என்றும் ஆனால் மேற்படி தேதியில் மேற்படி சாட்சியை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் விசாரணை

செய்யப்படவில்லை என்றும் மேலும் சாட்சியை மீண்டும் வரவழைக்க (Bind over) செய்து அனுப்பி வைத்திருக்கவேண்டும் என்றும் மனுதாரர்/பிரதிவாதி அவ்வாறு சாட்சியை நீதிமன்றத்திற்கு வரவழைத்துவிட்டு கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார் என்றும் அதனால் சமூகம் நீதிமன்றம் கடந்த 25.04.2025 அன்று சாட்சியை விடுவித்து வாதுரை செய்ய உத்திரவிட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கடந்த 11.06.2025ம் தேதியில் வாதுரை செய்யப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதுரை செய்ய 16.06.2025, 23.06.2025, 11.07.2025 தேதிகளில் வைக்கப்பட்டதாகவும் பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் 04.07.2025 அன்று மறுதிறப்பு மனு ஐ.ஏ.நெ.272.2025 மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி வேண்டுமென்றே வழக்கை முடிக்க விடாமல் காலம் கடத்த வேண்டும் என்ற தீய எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் கூறி இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை பார்வையிடுகையில் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி, மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக ஏற்றதை ஆற்றும் பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். 15.11.2023 அன்று வழக்கு சிறப்பு பட்டியலில் எடுக்கப்பட்டு சாட்சிய விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 23.04.2024 அன்று முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக 13.06.2024 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்த நிலையில் பிரதிவாதி தரப்பில் கட்டளை 16 விதி 1 சி.பி.சி.ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் பிரதிவாதி தரப்பில் 2வது சாட்சியாக வாதியின் கணவர் திரு.முனுசாமி அவர்களின் பாரத ஸ்டேட் வங்கியில் (State

Bank of India) பராமரித்து வரும் சேமிப்பு கணக்கு எண்.31187153566 ரெட்டியார்பாளையம் கிளையின் கடந்த 01.01.2020 முதல் 31.12.2022 வரையிலான வரவு செலவு பட்டியல் (State Bank of India) விபரங்களுடன் மேற்படி வங்கி மேலாளர் சாட்சியம் அளிக்க கோரி சாட்சிய சம்மன் அனுப்பிட அனுமதிக்க வேண்டப்பட்டு அது 07.12.2024 தேதியில் அனுமதிக்கப்பட்டு மேற்படி வங்கி மேலாளர் 25.04.2025 தேதியில் ஆஜராகிய நிலையில் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதின்றத்தில் ஆஜராகி வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்று மனுதாரர் குறிப்பிட்ட காரணம் ஏற்கத்தக்கதாகவே உள்ளது. ஆகவே, மனுதாரர் அவரது தரப்பு சாட்சியத்தை அளித்து வாதி தரப்பு வழக்கை எதிர்கொள்ள வாய்ப்பு வழங்கப்படவேண்டியது நீதியின்பால் சரியானதே என்று இந்த நீதுமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/ பிரதிவாதி செலவுத் தொகையாக ரூ.500/-யை எதிர்மனுதாரர்/வாதிக்கு வருகின்ற 09.12.2025 தேதி அன்று நேரடியாக செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும். மேலும் மேற்படி தேதியில் மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவராக சாட்சியம் அளிக்க வேண்டும். வாய்தா 09.12.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 26.11.2025 இன்று பகரப்பட்டது.

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

M S VARALAKSHMI

Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.